# இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தில் 25 மருத்துவமனைகளில் சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட 3192 பேருக்கு ரூ 1.72 கோடியில் உயர் தர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது

## தஞ்சாவூர் மாவட்டத்தில் பயனடைந்தோர் முதல்வருக்கு மனமார்ந்த நன்றி

**தஞ்சாவூர்,ஜூன்.29-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் பொருட்டு "இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48" என்ற சிறப்பான திட்டத்தினை 18.12.2021 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தினால் தமிழகத்தில் வசிப்பவர்கள் மட்டுமல்லாமல் உலகமெங்கும் வசிக்கும் நபர்கள் தமிழகத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் சாலை விபத்து ஏற்பட்டால் இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதால் இத்திட்டமானது இந்தியா மட்டுமல்ல உலகத்திற்கே ஒரு முன்மாதிரியான திட்டமாக திகழ்கிறது.

இத்திட்டத்தின் கீழ் சாலை விபத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும்.

தமிழ்நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட 215 அரசு மருத்துவமனைகள் மற்றும் 475 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 640 மருத்துவமனைகள் உரிய தகுதியின் அடிப்படையில் இணைக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகள் வழங்கி வருகிறது. மேலும் சாலை விபத்துகளில் காயமடைந்தவர்களுக்கு விபத்து ஏற்பட்ட 48 மணி நேரம் மிக முக்கியம் என்பதை கருத்தில் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தெரிவித்ததாவது:-





தமிழ்நாடு அரசு சாலை பாதுகாப்பு, சாலை விபத்துக்களை குறைத்தல், சாலை விபத்தில் உயிரிழப்புகளை தடுத்தல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில், சாலை விபத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளை குறைத்திடும் நோக்கில் தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்ட உன்னத திட்டமே இன்னுயிர் காப்போம் திட்டம்.

இத்திட்டத்தின் முக்கிய அங்கமாக, சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில்

"இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48" -திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட 201 அரசு மருத்துவமனைகள் மற்றும் 408 தனியார் மருத்துவமனைகள், என மொத்தம் 609 மருத்துவமனைகள் உரிய தகுதியின் அடிப்படையில் இணைக்கப்பட்டு, மருத்துவச் சிகிச்சைகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. சாலை விபத்துகளில் காயமடைந்தவர்களுக்கு விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரம் மிக முக்கியம் என்பதை கருத்தில் கொண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உடையவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வெளிநாட்டவர் என அனைவருக்கும் வருமான வரம்பு ஏதும் கணக்கில் கொள்ளாமல், தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயமடைவோர்களுக்கு முதல் 48 மணி நேரம் வரை கட்டணமின்றி மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட 81 மருத்துவச் சிகிச்சை முறைகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.1 லட்சம் வரை செலவினத்தில் சிகிச்சை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் மருத்துவமனையிலேயே முதல் 48 மணி நேரம் வரை அங்கீகரிக்கப்பட்ட சிசிக்சை முறைகளில் சிகிச்சை அளிக்கப்படும்.

48 மணி நேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் நிலையற்றவராக (ருளெவயடிடந) இருந்தால் அல்லது தொடர் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால், பின்வரும் மூன்று வழிகாட்டுதல்களின்படி சிகிச்சைகள் வழங்கப்படும்

1. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், நோயாளியை நிலைப்படுத்தி அந்த மருத்துவமனையிலேயே மேலும் சிகிச்சை தொடரலாம்.

2. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாமல் இருந்தால், நோயாளி மேற்கொள்ளும் சிகிச்சை காப்பீட்டுத் திட்டத்தில் இல்லை என்றால், நோயாளியை நிலைப்படுத்தி அரசு மருத்துவமனைக்கு மாற்றி சிகிச்சையை கட்டணமில்லாமல் தொடரலாம்.

3. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனைக்கு செல்ல தயாராக இல்லை என்றாலோ (அல்லது) தனியார் காப்பீட்டிலோ (அல்லது) பணம் செலுத்தியோ சிகிச்சையை பெற விரும்பினால், நோயாளியை நிலைப்படுத்தி அதே மருத்துவமனையிலோ அல்லது அவர் தேர்ந்தெடுக்கும் பிற மருத்துவமனையிலோ சிகிச்சைக்கான கட்டணத் தொகையை தனிநபரே செலுத்தி சிகிச்சையைத் தொடரலாம்.

இன்னுயிர் காப்போம் -நம்மைக் காக்கும் 48 திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் பற்றிய விவரங்கள் மாவட்ட வாரியாக பட்டியலிடப்பட்டு பொதுமக்கள் அனைவரும் அறியும் வகையில் வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இது குறித்து விவரங்களை மருத்துவமனை, அவசரகால ஊர்தி பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் அறியும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து மேலும் விவரங்கள் அறிய கட்டணமில்லா தொலைபேசி எண் 104-ஐ தொடர்பு கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் இது வரை 1 அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் 5 அரசு மருத்துவமனைகள் மற்றும் 19 தனியார் மருத்துவமனைகள் மொத்தம் 25 மருத்துவமனைகளில் பல்வேறு பகுதிகளில் சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட 3192 அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். எனக்காக அரசு செலவில் ரூபாய் 1.72 கோடியில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற விஜயகுமார் த-பெ. கோவிந்தன் தெரிவித்ததாவது:- நான் எனது இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது கோவிலாசேரி அருகே பின்னால் வந்த நான்கு சக்கர வாகனம் மோதியதில் விபத்து ஏற்பட்டது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கும்பகோணத்திற்கு கொண்டு வந்து சேர்த்தனர். எனது இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டதால் இங்கு இன்னுயிர் காப்போம் 48 மருத்துவ காப்பீட்டு முறையில் நன்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. இன்னுயிர் காப்போம் திட்டத்தை நடைமுறைப் படுத்திய தமிழக முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றி என தெரிவித்



துக் கொண்டார். இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்ற அருளாயி மாரியப்பன் தெரிவித்ததாவது:-

நான் மாலை 7 மணி அளவில் சோழன்மாளிகை பேருந்து நிலையத்திலிருந்து சாலை கடக்கும் போது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது இதனால் எனது வலது காலில் முறிவு ஏற்பட்டது ஆகையால் என்னை அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனை கும்பகோணத்தில் உள்நோயாளியாக சேர்த்தனர் எனக்கு முதல்வரின் இன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் சிகிச்சை



அளித்து அறுவை சிகிச்சையானது நடைபெற்றது இப்போது எனக்கு உடல்நலம் நன்றாக உள்ளது இன்னுயிர் காப்போம் திட்டத்தை தொடங்கி வைத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**தொகுப்பு:-**
**க.பிரேமலதா,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தஞ்சாவூர் மாவட்டம்**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் எண்ணும் எழுத்தும் திட்ட பணிகள் மூலம் கற்பிக்கப்படும் முறைகள்: கலெக்டர் கவிதாராமு ஆய்வு



**புதுக்கோட்டை,ஜூன்.29-**

புதுக்கோட்டை இராஜகோபாலபுரம் நகராட்சித் தொடக்கப் பள்ளியில், எண்ணும் எழுத்தும் திட்ட பணிகள் மூலம் மாணவ, மாணவியர்களுக்கு கற்பிக்கப்படும் முறைகள் குறித்து, கலெக்டர் கவிதா ராமு, (28.06.2022) ஆய்வு மேற்கொண்டார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.06.2022 அன்று எண்ணும் எழுத்தும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2025 ஆம் கல் வி யாண் டிற் குள் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் 3ஆம் வகுப்பினை நிறைவு செய்யும் மாணவ, மாணவியர்கள் அனைவரும் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களை பொருள் புரிந்து படிக்கவும், அடிப்படை கணக்குகளை செய்யவும் இத்திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி எண்ணும் எழுத்தும் திட்டத்தில் 1, 2, 3 ஆம் வகுப்புகளுக்கு கற்பிக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 மாவட்ட ஆசிரியர் பயிற்சி பள்ளி விரிவுரையாளர்கள், 3 வட்டார வளமைய பயிற்றுநர்கள், 6 இடைநிலை ஆசிரியர்களுக்கு மாநில அளவிலான முதன்மை கருத்தாளர்கள் பயிற்சியும், 298 இடைநிலை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலான கருத்தாளர்கள் பயிற்சியும், 1,965 இடைநிலை ஆசிரியர்களுக்கு வட்டார அளவிலான ஆசிரியர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

1ஆம் வகுப்பு அரும்பு கற்றல் நிலையிலும், 2ஆம் வகுப்பு அரும்பு, மொட்டு கற்றல் நிலையிலும், 3ஆம் வகுப்பு அரும்பு, மொட்டு, மலர் கற்றல் நிலையிலும் மாணவ, மாணவியர்களின் கற்றல் நிலையினை கண்டறிவதற்காக செயல் திட்டங்கள், வளறறி மற்றும் தொகுத்தறி மதிப்பீடுகள் பள்ளி அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் மாணவ, மாணவியர்களின் கற்றல் கற்பித்தல் திறன்கள் ஆரம்ப நிலையிலேயே சிறப்பான நிலையில் அமைந்து, அவர்களின் எதிர்கால கனவுகள் மெய்படும் வகையில் செயல் திட்டங்கள் எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது என கலெக்டர் கவிதா ராமு, தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் செ.மணிவண்ணன், மாவட்ட கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ஜீவானந்தம், உதவித் திட்ட அலுவலர் தங்கமணி, உதவித் திட்ட ஒருங்கிணைப்பாள் சுதந்திரன், வட்டார கல்வி அலுவலர்கள் செங்குட்டுவன், பிரியா மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்ட பணிகள்

## செய்தியாளர்களுடன் சென்று கலெக்டர் காயத்ரி கிருஷ்ணன் ஆய்வு

**திருவாரூர்,ஜூன்.29-**

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டாரம் காரக்கோட்டை கிராமத்திற்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி கட்டிடம் பழுதுநீக்க பணிகள் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட கலெக்டர் ப.காயத்ரி கிருஷ்ணன் செய்தியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார். நீடாமங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட காரக்கோட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி கட்டிடம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பழுதுநீக்க பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு பணிகளின் தரங்களை ஆய்வு செய்



தார். தொடர்ந்து காரக்கோட்டை ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தில் ரூ.31 ஆயிரம் மதிப்பீட்டில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகளை மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களுடன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இச்செய்தியாளர் பயணத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார், நீடாமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் அன்பழகன்,பொறியாளர் விஜயபாஸ்கர் மற்றும் அனைத்து பத்திரிக்கையாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், புகைப்படக்காரர்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள்

## செய்தியாளர்களுடன் சென்று கலெக்டர் ஸ்ரீவெங்கட பிரியா ஆய்வு

**பெரம்பலூர்,ஜூன்.29-**

பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூர் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை கலெக்டர் ப.ஸ்ரீவெங்கட பிரியா அண்மையில் (17.06.2022) செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். எளம்பலூர் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்று ஆய்வு செய்த கலெக்டர் அரசின் திட்டங்கள் ஊராட்சியில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் எளம்பலூர் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்த கலெக்டர், இத்திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளையும் ஆய்வு செய்தார்.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் தேசிய கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம், நபார்டு திட்டத்தின் கீழ் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு ஊரக சாலைகள்



மேம்பாட்டு திட்டம், மூலதன நிதி திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் எளம்பலூர் ஊராட்சியில் என்னென்ன பணிகள் நடைபெற்று வருகிறது என்பது குறித்தும் அந்த பணிகள் எந்த அளவிற்கு முடிவுற்றுள்ளது, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர எத்தனை நாட்கள் ஆகும் என்பது குறித்தும் கலெக்டர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.அதனைத் தொடர்ந்து, எளம்பலூர் உசேலேரி குளம் ஆழப்படுத்தியுள்ள பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார். பின்னர், எளம்பலூர் ஊராட்சி சமத்துவபுரத்தில் ரூ.79.40 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்பு பணிகளையும், புனரமைக்கப்பட்ட வீடுகளையும் மாவட்ட கலெக்டர் பார்வையிட்டார்.பின்னர் எளம்பலூர் ஊராட்சியில் உள்ள நியாய விலை கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்கள் தரமாக உள்ளதா எனவும், பொதுமக்களுக்கு தேவையான பொருட்கள் போதுமான அளவில் இருப்பு உள்ளதா எனவும் கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: எளம்பலூர் ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் குறித்து பார்வையிடப்பட்டது. குறிப்பாக எளம்பலூரில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள் பார்வையிடப்பட்டது.

ச மத் து வ பு ரத் தில் சிமெண்ட் சாலை அமைத்தல், பூங்கா மேம்பாட்டு பணி, சமுதாயக் கூடம் பழுது பார்த்தல், நூலகம் பழுது பார்த்தல், அங்கன்வாடி பழுது பார்த்தல், நியாய விலைக் கடை பழுது பார்த்தல், நுழைவு வாயில் பழுது பார்த்தல் மற்றும் 100 வீடுகளை பழுது பார்த்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் ரூ.79.40லட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு தெரிவித்தார்.செய்தியாளர் பயணத்தின் போது, உதவி இயக்குநர் (ஊராட்சிகள் / தணிக்கை) ந.கணபதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரெ.சேகர், (வட்டார ஊராட்சி), இரா.அறிவழகன் (கிராம ஊராட்சிகள்), பெரம்பலூர் வட்டாட்சியர் கிருஷ்ணராஜ், இளநிலை பொறியாளர் ம.க.ராஜபாபு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கரூர் மாவட்டத்துக்கு முதல்வர் வருகையையொட்டி, திருமாநிலையூர் மைதானத்தில் முன்னேற்பாடு பணிகள்: அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆய்வு

**கரூர்,ஜூன்.29-**

.தமிழக முதலமைச்சர் கரூர் மாவட்டத்திற்கு வருகை புரிவதையொட்டி, (28.06.2022) திருமாநிலையூர் மைதானத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து . மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி , ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வில், கலெக்டர் டாக்டர்.த.பிரபுசங்கர் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் E.சுந்தரவதனம் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் சிவகாமசுந்தரி ,மேயர் கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தார். விழா நடைபெறும் மைதானத்தை ஆய்வு செய்தஅமைச்சர் செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சர் வருகின்ற 1ந்தேதி மாலை கரூர் மாவட்டத்திற்கு வருகை தர உ ள்ளார்கள். 2ந் தேதி காலை மிக எழுச்சிமிகு அரசினுடைய நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளை .முதலமைச்சர் பயனாளிகளுக்கு அரசினுடைய நலத்திட்டங்களை வழங்கி, எழுச்சி உரை ஆற்ற இருக் கின் றார் கள்1-ந் தேதி மாலை .முதலமைச்சர் அவர்களுக்கு குளித்தலை, கிருஷ்ணராயபுரம், மாயனூர், வெங்கக்கல்பட்டி ஆகிய நான்கு இடங்களில் உற்சாக வரவேற்பு வழங்கப்படுகின்றன. அன்று மாலை பயணியர் மாளிகையில் . முதலமைச்சர் வருகை தந்தவுடன் கரூர் மாவட்டத்திற்குட்ட தொழில் முனைவோர் சங்கத்தை சேர்ந்த நிர்வாக பெருமக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு மனுக்களை பெற இருக்கின்றார்கள். 2அன்று காலை 10.00 மணிக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த



நிகழ்வு நடைபெற இருக்கின்றன. 9.00 மணிக்கு துவங்கி பயணியர் மாளிகைக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த திருமாநிலையூர் இடம் வரை 23 இடங்களில் ஏறத்தாழ 1,10,000 நபர்கள் .முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இதுவரை இல்லாத அளவிற்கு 76,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில், அடையாளம் காணப்பட்டு ஒரே அரங்கத்தில், ஒரே நாளில், ஒரே நேரத்தில் .முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 76,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த நிகழ்வு ஆகும்.

2021 மே மாதம் 7-ந் தேதி . தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்று முதல் அரசு நிகழ்வுக்கு கரூர் மாவட்டத்திற்கு .தமிழக முதலமைச்சர் வருகைதர இருக்கின்றார்கள். கரூர் மாவட்டம் என்பது 1ந்தேதி மாலையும், 2-ந்தேதியும் ஒரு திருவிழாக் கோலம் துவங்கக் கூடிய அளவிற்கு ஒரு சிறப்பான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மதிப்பிற்குரிய கலெக்டர் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள், மதிப்பிற்குரிய மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளும் இந்த சிறப்பான நிகழ்வுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி இதுவரையிலும் தமிழ்நாட்டில் ஒரே மாவட்டத்தில் குறிப்பாக நான்கு சட்டமன்ற தொகுதிகளை மட்டுமே கொண்ட கரூர் மாவட்டத்தில் 76,000-க்கும் மேற்பட்ட பயனாளிகள் ஒரே நாளில் , ஒரே அரங்கத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குவது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகும். மேலும், பயனாளிகளை அழைத்து வருவதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அவர்களுக்குரிய பணிகளை திறம்பட செயல்படுத்த வேண்டும். குறிப்பாக பயனாளிகளுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் சிற்றுண்டி வழங்க வேண்டும். விழா நிகழ்ச்சிகளை எந்தவித சுணக்கமும் இல்லாமல் நிகழ்ச்சியினை பிரம்மாண்டமான விழாக்கோலமாக அரசு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென . மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

பின்னர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், .தமிழ்நாடு முதலமைச்சர் வருகையையொட்டி, அனைத்துத் துறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் . அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் எம்.லியாகத், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்தராசலம், கரூர் மாநகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தண்டபாணி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை கலெக்டர் சைபுதீன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் ரூபினா மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் நகராட்சி உறுப்பினர்கள் சாதாரண கூட்டம்

**அரியலூர்,ஜூன்.29-**

அரியலூர் நகராட்சி அலுவலக கூட்டரங்கில் நகராட்சி உறுப்பினர்களின் சாதாரண கூட்டம்,நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன் தலைமையில்நேற்றுநடந்தது.

கூட்டத்திற்கு அரியலூர் நகராட்சி ஆணையர்சித்ராசோனியா, நகராட்சிபொறியாளர் தமயந்தி முன்னிலைவகித்தனர்.நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும்வரவேற்றார். இதனை யடுத்து நகராட்சி அலுவலக பொறியாளர் பிரிவு உதவியாளர் செந்தில்குமார் 54 தீர்மானங்களை வாசித்தார். இதனை யடுத்து செலவீனங்கள் உள்ளிட்ட 54 தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் நகராட்சி மேலாளர் சரஸ்வதி, திமுக நகர்மன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர்.

**Before the Honorable District Munsif Court at Madhavaram**
**I.A. No. 217/2021 In O.S.No. 92 / 2021**
A.Jothilingam ..... Plaintiff/Petitioner
Vs
(D2) Mr. Mani ..... Plaintiff/Respondent
Please take that the petition that file the suit for permanent Injunction in which an I.A. No. 217/2021 in O.S.No.92 /2021was filed for Interim Injunction. The Hon'ble District Munsif judge Madhavaram claim was pleased to order notice return by 05.08.2022. Please be present in the said court on 05.08.2022 at 10.30 A.M. either in person or through counsel and file your counter if any failing which the matter will be claim in your absence exparte.
Counsel for Plaintiff / Petitioner
D.DAMODARAN, B.Sc., M.A., M.L.

# ஊத்துக்கோட்டையில் நகரங்களின் தூய்மை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி



**ஊத்துக்கோட்டை, ஜுன்-29.**
ஊத்துக்கோட்டையில் நகரங்களின் தூய்மை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**விழிப்பணர்வு பேரணி**

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் எனது குப்பை எனது பொறுப்பு என்ற தலைப்பில் நகரங்களின் தூய்மை குறித்தும், பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்தும் விழிப்புணர்வு பேரணி பேரூராட்சி செயல் அலுவலர் தா.மாலா, பேரூராட்சி தலைவர் அப்துல் ரஷீத் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பேரூராட்சி துணைத்தலைவர் குமரவேல், அபிராமி குமரவேல், வெங்கடேசன், கோல்ட் மணி என்கின்ற மணிகண்டன், கோகுலகிருஷ்ணன், அருணாச்சலம், ஆனந்தி உள்ளிட்ட வார்டு கவுன்சிலர்கள் முன்னிலை வகித்தனர்.

சுகாதார ஆய்வாளர் சுப்பிரமணி மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் கோபி ஆகியோர் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்தும், மக்கும் குப்பை, மக்கா குப்பை மற்றும் மறுசுழற்சி குப்பை உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த விழிப்புணர்வு பேரணி பேரூராட்சி அலுவலகத்தில் துவங்கி பஜார் வீதி, திருவள்ளூர் சாலை, நாகலாபுரம் சாலை, சத்தியவேடு சாலை ஆகிய முக்கிய சாலைகள் வழியாக சென்று மீண்டும் பேரூராட்சி செயல் அலுவலகத்தில் நிறைவு பெற்றது.

அப்போது பேரணியில் சென்றவர்கள் ஒழிப்போம் ஒழிப்போம் பிளாஸ்டிக்கை ஒழிப்போம் என்று கோஷங்களை எழுப்பி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பின்னர் பேரணியில் கலந்து கொண்ட அனைவரும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து உறுதிமொழி ஏற்றனர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் மகளிர் குழுவினர், தூய்மைப் பணியாளர்கள், பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சி கூட்டம்: மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடந்தது

## போஜராஜன் நகரில் ரூ.13 கோடியில் ரெயில்வே சுரங்கப்பாதை உள்ளிட்ட 100 தீர்மானங்கள் நிறைவேற்றம்



**சென்னை ஜுன் 29-**
சென்னை மாநகராட்சியின் கூட்டம் நேற்று நடந்தது. மேயர் பிரியா தலைமை தாங்கினார். துணை மேயர் மகேஸ் குமார், கமிஷனர் (பொறுப்பு) பிரசாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் அனைத்து கவுன்சிலர்களும் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் தி.நகரில் வாகன நிறுத்த கட்டணத்தை உயர்த்துவது என்று முடிவு செய்யப்பட்டது. தற்போது தி.நகரில் பிரீமியம் பார்க்கிங் கட்டணமாக ஒரு மணி நேரத்துக்கு காருக்கு ரூ.40-ம், மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ.10-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த கட்டணம் உயர்த்தப்பட்டு உள்ளது. இதன்படி கார்களுக்கான கட்டணம் ரூ.20 உயர்த்தப்பட்டு உள்ளது. இதில் கார் பார்க்கிங் கட்டணம் ஒரு மணி நேரத்துக்கு ரூ.60 ஆக வசூலிக்கப்படும். மோட்டார் சைக்கிள்களுக்கு கட்டணம் ரூ.5 உயர்த்தப்பட்டு உள்ளது. இதற்கான தீர்மானம் இன்றைய மாநகராட்சி கூட்டத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சென்னையை பொறுத்தவரை 83 இடங்களில் வாகன நிறுத்தும் இடங்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இடங்களில் 12 ஆயிரம் வாகனங்களை நிறுத்தலாம். தி.நகர் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் கார்களுக்கான கட்டணம் ரூ.20 ஆகவும், மோட்டார் சைக்கிள்களுக்கான கட்டணம் ரூ.5 ஆகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கொருக்குப் பேட்டை போஜராஜன் நகரில் ரெயில்வே கேட் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதை தவிர்க்க ரூ.13 கோடியில் ரெயில்வே சுரங்கப்பாதை அமைக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு உள்ளது.

தி.நகரில் மட்டும் வாகன நிறுத்த கட்டணம் உயர்த்தப்பட்டு உள்ளது ஏன்? என்பதற்கு மாநகராட்சி அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூறும்போது, 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தின் கீழ் பல அடுக்கு வாகன நிறுத்தும் இடமாக பார்க்கிங் பகுதி வடிவமைத்து கட்டப்பட்டுள்ளது. இதற்கான பராமரிப்பு செலவினம் அதிகமாக இருப்பதால் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளதாக தெரிவித்தனர்.

சென்னை மாநகராட்சி முதல் கூட்டம் ஏப்ரல் மாதம் நடந்தது. அப்போது மாநகராட்சி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. மாநகராட்சி மேற்கொள்ளும் பணிகளுக்கு கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் பெற வேண்டும். ஏற்கனவே அனைத்து மண்டல குழுக்களுக்கும் மேயர் அனுப்பி இருக்கும் சுற்றறிக்கையில், 'ஒவ்வொரு மாதமும் 10-ந்தேதிக்குள் மண்டல கூட்டங்களை நடத்தி முடித்து தீர்மானங்களை மாநகராட்சிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மண்டல குழுக்களில் முன் வைக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையிலேயே பணிகள் தேர்வு செய்யப்பட்டு மாமன்ற கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

மாநகராட்சி கூட்டத்தில் 81-வது வார்டு தி.மு.க. உறுப்பினர் சாந்தகுமார், சென்னையில் குப்பைகள் சேகரிப்பது பற்றி கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த மேயர் பிரியா, சென்னையில் ஓராண்டில் ஒரு லட்சத்து 54 ஆயிரம் மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளும், 75 ஆயிரம் மெட்ரிக் டன் மக்காத குப்பைகளும் சேரிக்கப்படுகிறது. இதில் மக்கும் குப்பைகளில் இருந்து 3 ஆயிரம் டன் உரம் தயாரிக்கப்படுகிறது.

அதில் 2 ஆயிரம் டன் உரம் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. 1000 டன் மாநகராட்சி பூங்காங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்றார்.

கொரோனா காரணமாக இன்றைய கூட்டத்தில் நேரமில்லா நேரம் ரத்து செய்யப்பட்டு இருந்தது. இதற்கு மண்டல தலைவர் தனசேகரன் எதிர்ப்பு தெரிவித்தார். 200 வார்டுகளிலும் உள்ள பிரச்சினைகளை நேரமில்லா நேரத்தில்தான் எழுப்ப முடியும். எனவே அதை ரத்து செய்யாமல் கூட்டத்தை நாள் முழுவதும் நடத்தி இருக்கலாம் என்றார். இதற்கு பதில் அளித்த மேயர் பிரியா, கொரோனா காரணமாகவே நேரமில்லா நேரம் ரத்து செய்யப்பட்டு உள்ளது. அடுத்த கூட்டத்தில் அது சேர்க்கப்படும் என்றார். முடிவில் 100 தீர்மானங்கள் ஏற்று கொள்ளப்பட்டது 1.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறைக்கு தேவையான ஆளில்லா வான் வழி கழகத்தில்டிரோன் இயக்குநர் பயிற்சி பெற்ற உரிமம் உள்ள 7திருநங்கை(Transgender) பைலட்டுகளைதற்காலிகமாக ஓராண்டிற்கு பணியமர்த்த (ரூ.25000x7x12= ரூ.21,00,000) மேலும் சரக்கு மற்றும் சேவை வரிகள் 18% சேர்த்து ரூ.3,78,000/- மொத்தம் ரூ.24,78,000/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்)ஐதிருவாளர். Tamil Nadu Unmanned Aerial Vehicle Coroporation அவர்கள் வழங்கிய தொகையையே நிர்வாக அனுமதியாக ஏற்கவும், மற்றும் அரசு நிறுவனம் என்பதால் அவர்களுக்கு பணி ஆணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும், நிர்வாக நலன் கருதி, பணி ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து ஓராண்டிற்கு இப்பணியை மேற்கொள்ளவும், ஆளில்லா வான் வெளி கருவிகள் (Drone) இயக்கும் திருநங்கை(Transgender) பைலட்டுகள் ஒவ்வொரு மாதமும் அவர்கள் பணி செய்த நாட்களுக்கு (நீர்நிலைகளில் பணிபுரிந்த பதிவேட்டுடன்) முதுநிலை / இளநிலை பூச்சியியல் வல்லுநர்களிடமிருந்து பணியாளர்களின் வருகைச் சான்று பெற்று அதனடிப்படையில் பட்டி தொகையை திருவாளர். Tamil Nadu Unmanned Aerial Vehicle Coroporation அவர்களுக்கு வழங்கவும்,

ஆளில்லா வான் வெளி கருவிகள் (Drone) இயக்கும் பணிக்குண்டான மொத்த செலவினத்தில் 2% பிணை வைப்பு தொகை ரூ.49,560/-ஐ வைப்பு வைத்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருடன் உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்பணிக்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சிநிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-32-02 கணக்கு குறியீடு 210-10-06-05 (Payment to casual staff others) என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும், நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்), மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.21.06.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.37/2022, நாள்.21.06.2022-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

# சென்னை மீஞ்சூர் வடக்கு ஒன்றியத்திற்கு வேட்புமனு தாக்கல்



**பொன்னேரி ஜுன்-29**
திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், மீஞ்சூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளராக போட்டியிடும் ஆசானபூதூர் பா.சுகுமாரன் திமுகழக 15வது அமைப்பு தேர்தலுக்கு ஒன்றிய கழக வேட்பு மனுவினை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அமைப்பாளர் டி.ஜே.கோவிந்தராஜன் முன்னிலையில் தேர்தல் ஆணையர் திமுக செய்தி தொடர்பு இணைச்செயலாளர் சிவஜெயராஜிடம் தாக்கல் செய்தார்.

திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர்கள் சி.எச்.சேகர், கோளூர் கதிரவன், மீ.வி. கோதண்டம், எம்.எல்.ரவி ஆகியோர் அருகில் இருந்தனர்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன் பொன்னேரியில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அவருடன் பொன்னேரி நகர் மன்றத் தலைவர் டாக்டர்பரிமளம் விஸ்வநாதன், மீஞ்சூர் ஒன்றியக் குழுத் துணை தலைவர் தமிழ்செல்வி பூமிநாதன், முன்னாள் பொன்னேரி நகர இளைஞரணி அமைப்பாளர் டாக்டர்.மா.தீபன், அண்ணாமலைச்சேரி ஆறுமுகம், தமிழ் உதயன், செங்கல்வராயன், யாக்கோப், நல்லசிவம், உமாபதி, தமிழ் கு டி ம கன், கோ ளூர் கோபால், தேவம்பட்டு ரவி, கலைமாமணி ராஜேந்திரன் மற்றும் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், பொன்னேரி வார்டு கவுன்சிலர்கள், பிற அணிகளின் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கீழ்ப்பாக்கத்தில் துணிகரம்: அம்மன் கோவில் உண்டியலை உடைத்து கொள்ளை

**சென்னை ஜுன் 29-**
கீழ்ப்பாக்கத்தில் அம்மன் கோவில் உண்டியலை உடைத்து கொள்ளையடித்து சென்ற 4 பேரை போலீசார் வலைவீசி தேடிவருகின்றனர்.
சென்னை சென்னை கீழ்ப்பாக்கம் நியூ ஆவடி சாலையில், பழமையான கங்கையம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலை வழக்கம்போல பூசாரி பழனி நேற்று முன்தினம் காலை திறந்தார்.

**கொள்ளை**

அவர், காலை பூஜைக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த பெண் பக்தை ஒருவர் கோவில் உண்டியல் உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதாக தெரிவித்தார். கோவில் பூசாரி பழனி இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து டி.பி.சத்திரம் போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். உடைக்கப்பட்ட உண்டியலில் பதிவாகி இருந்த கொள்ளையர்களின் கைரேகை பதிவு செய்யப்பட்டது. கோவிலில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தபோது, 4 பேர் மதில் சுவரை தாண்டி குதித்து கோவிலின் பின்பக்க கதவு வழியாக கோவிலுக்குள் புகுந்து இருப்பது தெரியவந்தது. கண்காணிப்பு கேமரா பதிவுகளை அடிப்படையாக வைத்து 4 கொள்ளையர்களையும் போலீசார் தேடி வருகிறார்கள். கோவில் உண்டியலில் எவ்வளவு பணம் கொள்ளை போனது என்பது பற்றிய விவரம் தெரியவில்லை

**4 பேர்**

சென்னை கீழ்ப்பாக்கம் நியூ ஆவடி சாலையில், பழமையான கங்கையம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலை வழக்கம் போல பூசாரி பழனி நேற்றுமுன்தினம் காலை திறந்தார். அவர், காலை பூஜைக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த பெண் பக்தை ஒருவர் கோவில் உண்டியல் உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதாக தெரிவித்தார். கோவில் பூசாரி பழனி இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து டி.பி.சத்திரம் போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். உடைக்கப்பட்ட உண்டியலில் பதிவாகி இருந்த கொள்ளையர்களின் கைரேகை பதிவு செய்யப்பட்டது. கோவிலில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தபோது, 4 பேர் மதில் சுவரை தாண்டி குதித்து கோவிலின் பின்பக்க கதவு வழியாக கோவிலுக்குள் புகுந்து இருப்பது தெரியவந்தது. கண்காணிப்பு கேமரா பதிவுகளை அடிப்படையாக வைத்து 4 கொள்ளையர்களையும் போலீசார் தேடி வருகிறார்கள். கோவில் உண்டியலில் எவ்வளவு பணம் கொள்ளை போனது என்பது பற்றிய விவரம் தெரியவில்லை.

# பெண்ணுக்கு பாலியல் தொல்லை: முதியவர் கைது

**சென்னை,ஜுன்.29**
சென்னை சூளைமேடு பகுதியைச் சேர்ந்த 39 வயது பெண் ஒருவர், எம்.எம்.டி.ஏ.காலனி பகுதியில் சாலையில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த நபர் ஒருவர், அந்த பெண்ணை திடீரென்று கட்டிப்பிடித்து பாலியல் தொல்லை கொடுத்தார். அவரது பிடியில் இருந்து தப்பிய அந்த பெண், இதுகுறித்து சூளைமேடு போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். போலீசார் நடத்திய விசாரணையில், பாலியல் தொல்லை கொடுத்தவர் முதியவர் என்று தெரியவந்தது. அவரது பெயர் ரவி (வயது 60). அம்பத்தூர், கள்ளிக்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர். அவரை போலீசார் கைது செய்தனர்.

# கேரம்போர்டு விளையாடுவதில் ஏற்பட்ட தகராறில் வாலிபருக்கு கத்திகுத்து

**சென்னை ஜுன் 29-**
சென்னை, அசோக்நகர், 84வது தெரு, எண்.16/62 என்ற முகவரியில் வசித்து வரும் மகேஷ், என்பவர் தனது வீட்டின் முன்பு தனது நண்பர்களுடன் சேர்ந்து கேரம்போர்டு விளையாடிக்கொண்டிருந்த போது ஏற்பட்ட வாய்தகராறு முற்றியதில் ஆத்திரமடைந்த அதே பகுதியைச்சேர்ந்த செல்வம், ரிக்கி (எ) ரிச்சர்ட், சரத் (எ) சரத்குமார் மேற்படி மகேஷை கத்தியால் தாக்கியுள்ளனர். மேலும் இதனை தடுக்க வந்த மகேஷின் நண்பர் விக்னேஷ் என்பவரையும் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பியுள்ளனர். காயமடைந்த மகேஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து விக்னேஷ் கே.கே.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது. கே.கே.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.செல்வம், 2.ரிக்கி (எ) ரிச்சர்ட், 3.சரத்(எ) சரத்குமார், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 கத்திகள் பறிமுதல் செய்தனர்.

# சென்னையில் போலி ரேஷன் கடைகளை காட்டி ரூ.மூன்றரை கோடி நூதன மோசடி வழக்கில் முக்கிய குற்றவாளி கைது

**சென்னை ஜுன் 29-**
மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளதாக கூறி சென்னையில் போலி ரேஷன் கடைகளை காட்டி ரூ.3½ கோடி நூதன மோசடியில் ஈடுபட்ட கும்பலைச்சேர்ந்த முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டார்.

சென்னை தண்டையார் பேட்டையைச் சேர்ந்தவர் என்.ஆர்.பாலாஜி. இவர் பருப்பு உள்ளிட்ட சிறு தானிய வகைகள் விற்பனை செய்யும் மொத்த வியாபாரி ஆவார். இவர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார். அந்த புகார் மனுவில் கூறி இருப்பதாவது:- எனக்கு தெரிந்த நண்பர் மூலம் அறிமுகமாகி பாண்டியராஜன், ஜெய்கணேஷ், ஹரிகரன் மற்றும் உமா என்ற பெண் ஆகியோர் என்னை நேரில் சந்தித்து பேசினார்கள். அவர்கள் நூதன திட்டம் ஒன்றை என்னிடம் கூறினார்கள். மத்திய அரசு கிஷான் ரேஷன் ஷாப் என்ற ரேஷன் கடைகளை தொடங்கி அதன் மூலம் ஏழை-எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மலிவு விலையில் பொருட்களை வழங்க திட்டம் வகுத்துள்ளதாகவும் கூறினார்கள். அது போன்ற ரேஷன் கடைகளை தொடங்கி நடத்த மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளதாகவும், அதற்கான அரசாணை நகல் ஒன்றையும் என்னிடம் காட்டினார்கள். அவர்கள் சொன்ன தகவல் நம்பும்படி இருந்தது.

அவர்கள் தொடங்கப்போகும் ரேஷன் கடைகள் என்று சில கடைகளை காட்டினார்கள். மேலும் அதற்கு தேவைப்படும் பொருட்களை பெற சில நிறுவனங்களிடம் ஒப்பந்தம் போட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். ஒப்பந்தம் போட்ட நகல்களையும் காட்டினார்கள். அவர்கள் நடத்தும் ரேஷன் கடைகளுக்கு பருப்பு உள்ளிட்ட சிறுதானிய பொருட்கள் தேவைப்படுவதாக தெரிவித்தனர். பருப்பு உள்ளிட்ட சிறுதானிய பொருட்களை என்னை சப்ளை செய்யும் படி கேட்டனர். அதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் என்னிடம் போட்டனர். ஒப்பந்தப்படி அவர்கள் கேட்ட பருப்பு உள்ளிட்ட பொருட்களை ரூ.3½ கோடி அளவுக்கு நான் சப்ளை செய்தேன். ஆனால் பொருட்களை வாங்கிய அவர்கள், குறிப்பிட்ட ரேஷன் கடைகள் எதையும் நடத்திய மாதிரி தெரியவில்லை. பொருட்களை வாங்கிய அவர்கள் மத்திய அரசு பணம் ஒதுக்கியவுடன் எனக்கு தரவேண்டிய தொகையை தருவதாக சொன்னார்கள். அது அத்தனையும் பொய் என்று தெரிய வந்தது. அவர்கள் காட்டிய மத்திய அரசு அனுமதி நகல், பொருட்களை வாங்குவதற்கு அவர்கள் பல்வேறு நிறுவனங்களிடம் போட்டதாக காட்டிய ஒப்பந்த நகல்களும் போலியானவை என்றும் தெரிய வந்தது. அவர்கள் சொன்ன ரேஷன் கடை திட்டமும் போலியானது. பண மோசடிக்கு அந்த கும்பல் நடத்திய நாடகம் அம்பலமானது. மத்திய அரசு பெயரில் என்னிடம் ரூ.3½ கோடிக்கு பொருட்கள் வாங்கி மோசடி லீலைகளை அரங்கேற்றிய அந்த கும்பலை கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் புகார் மனுவில் தெரிவித்து இருந்தார்.

இந்த புகார் மனு மீது சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். மோசடி கும்பலின் மூளையாக செயல்பட்ட முக்கிய புள்ளி பாண்டியராஜன் என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டார். மோசடி கும்பலைச்சேர்ந்த இன்னொரு முக்கிய குற்றவாளியான ஜெய்கணேஷ் (வயது 32) என்பவரை உத்தரபிரதேச மாநிலம் மதுராவில் வைத்து மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர். அவரை சென்னை அழைத்து வந்து நீதிமன்ற காவலில் போலீசார் சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள மற்ற குற்றவாளிகளை போலீசார் தேடி வருகிறார்கள்.



**கருணாநிதி 99வது பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் 13வது வட்ட திமுக சார்பில் மண்டல குழுத்தலைவரும் பகுதி செயலாளருமான தி.மு.தனியரசு தலைமையில் மாவட்ட பிரதிநிதி ஆர்.ரஜினிபாபு ஏற்பாட்டில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பாடநூல் திட்டக்குழு தலைவர் திண்டுக்கல் லியோனி பேசினார். மாவட்ட பொறுப்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் சாலையோர ஏழை வியாபாரிக்கு தள்ளுவண்டியும் 500 பெண்களுக்கு புடவை 100 பேருக்கு தண்ணீர் குடம் வழங்கினார். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் குறிஞ்சி கணேசன் வட்ட செயலாளர் கே.தியாகராஜன், மாவட்ட பிரதிநிதி ரஜினிநந்தி கலந்து கொண்டனர்.**

# திமுக உட்கட்சி தேர்தலில் வேட்புமனு தாக்கல்: நிர்வாகிக்கு அடி உதை

**சென்னை ஜுன் 29-**
திமுக உட்கட்சி தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய வந்த நிர்வாகி சட்டை கிழிந்த நிலையில் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்ததார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அந்த மாவட்டத்திற்கு உட்பட்ட 15 வது அமைப்பு தேர்தல் 10 ஒன்றிய நிர்வாகிகளுக்கான வேட்பு மனுத்தாக்கல் குன்றத்தூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இதில் குன்றத்தூர், காட்டாங்கொளத்தூர், திருப்போரூர் உள்ளிட்ட 10 ஒன்றிய நிர்வாகிகளுக்கான வேட்பு மனு தாக்கல் செய்தனர். அப்போது திருப்போரூர் ஒன்றியத்தை சேர்ந்த ரோஸ் நாகராஜன் என்பவர் ஒன்றிய செயலாளருக்கான வேட்பு மனு தாக்கல் செய்ய சென்ற போது அங்கிருந்த திருப்போரூர் ஒன்றிய நிர்வாகிகள் அவரை அடித்து தாக்கினார்கள். இதையடுத்து அங்கு பாதுகாப்பு பனியில் இருந்த போலீசார் அவரை அங்கிருந்து மீட்டு வெளியே கொண்டு வந்தனர்.

**புகார்**

இதில் அவரது சட்டை கிழிக்கப்பட்டு, லேசான காயம் ஏற்பட்டது. இதுகுறித்து நாகராஜன் குன்றத்தூர் போலீசில் தனது ஆதரவாளர்களுடன் சென்று புகார் அளித்தார் இந்த புகாரின் பேரில் குன்றத்தூர் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் ரோஸ் நாகராஜன் சட்டை கிழிந்த நிலையில் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்க சென்ற போது தாம்பரம் எம்.எல்.ஏ. எஸ்.ஆர்.ராஜா அங்கு சென்றார். அப்போது புகார் அளிக்க வந்த நபர் கிழிந்த சட்டையுடன் இருப்பதை கண்டு தனது காரில் இருந்த புதிய சட்டையை கொடுத்து மாற்றி கொள்ளும்படி கொடுத்தார்.

# கீழே விழும் நிலையில் உள்ள மரங்களை அகற்ற மாநகராட்சி உத்தரவு

**சென்னை ஜுன் 29-**
காய்ந்த மற்றும் கீழே விழும் நிலையில் உள்ள மரங்களை அகற்ற வேண்டும் என சென்னை மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. சென்னையிலும் கடந்த சில தினங்களாக அவ்வப்போது கன முதல் மிதமான மழை பெய்கின்றது.

அப்போது திடீரென மரங்கள் விழுவதால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது. இந்த விபத்துகளால் சில நேரங்களில் பொதுமக்களுக்கு காயங்களும், சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்படுகிறது. நேற்று இரவு கூட சென்னையில் பல்வேறு இடங்களில் மழை பெய்தது. இந்நிலையில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகராட்சி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவில் காய்ந்த மற்றும் கீழே விழும் நிலையில் உள்ள மரங்கள், மரக்கிளைகளை அகற்ற வேண்டும் எனவும், மரங்கள் கீழே விழுந்தால் அப்புறப்படுத்த தேவையான எந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு சென்னை மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.

# விமான நிலையத்தில் ரூ.10 லட்சம் வெளிநாட்டு பணம் பறிமுதல்

**சென்னை ஜுன் 29-**
சென்னை விமான நிலையத்தில் ரூ.10 லட்சம் வெளிநாட்டு பணத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்து விசாரித்து வருகின்றனர்.

சென்னை சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் செல்ல வந்த பயணிகளை விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது இலங்கையை சேர்ந்த பெண்ணை சந்தேகத்தின்பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் அவர் முன்னுக்குபின் முரணாக பேசியதால் அவரது உடைமைகளை சோதனை செய்தனர். அதில், ஆடைகளுக்குள் கட்டுக்கட்டாக சவுதி ரியால்கள் மறைத்து வைத்து இருப்பதை கண்டுபிடித்தனர். அவரிடம் இருந்து ரூ.10 லட்சம் மதிப்புள்ள சவுதி ரியால்களை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அது ஹவாலா பணமா? என இலங்கை பெண்ணிடம் சுங்க இலாகா அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

